காட்டன் ஹவுஸ்®
திருவான்மியூர் Ph: 91764 44440
OMR- காரப்பாக்கம் Ph: 044 -24454443
WOMENS WEAR | MENS WEAR | KIDS WEAR

தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 19 ஜூலை 2026

ஞாயிறுக்கிழமைதோறும்
தினமணியுடன்...
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!
படியுங்கள்

‘தமிழ்நாடு நாள்’: முதல்வர் விஜய், மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூலை 18: தமிழ்நாடு நாளையொட்டி, முதல்வர் ஜோசப் விஜய் வாழ்த்து தெரிவித்தார். மேலும், மாநிலம் உருவான நவ. 1-ஆம் தேதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

முதல்வர் ச.ஜோசப் விஜய்: தமிழரின் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் மொழி உணர்வைப் போற்றும் வகையில் நமது மாநிலத்துக்கு ‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இந்த நாளில் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாநிலமாக உருவான நவ. 1-ஆம் தேதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும். சமத்துவம், சமூகநீதி தழைத்தோங்கி, கல்வி, தொழில்நுட்பம், மனிதவளம் ஆகியவற்றில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்.

தமிழின் இனிமையும், தமிழரின் உயரிய பண்பாடும், மனித நேயமும் தலைமுறைகள் கடந்தும் தழைத்தோங்கட்டும்

மு.க.ஸ்டாலின் (திமுக தலைவர்): 1956-ஆம் ஆண்டு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிந்தாலும், ‘மெட்ராஸ் மாகாணம்’ என்ற பெயரிலேயே தொடர்ந்தது. எத்தனையோ முயற்சிகள், தீர்மானங்கள், போராட்டங்கள் நடத்தியும் எதுவும் மாறவில்லை. 1967-ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்ததும், அன்றைய முதல்வர் அண்ணாவால் ஒட்டுமொத்த மாநிலத்தின் உணர்வையும் எதிரொலிக்கும் வகையில் ‘தமிழ்நாடு’ என பெயர் மாற்றப்பட்டது.

உதயநிதி (எதிர்க்கட்சித் தலைவர்): ‘மெட்ராஸ் மாகாணம்’ என்றிருந்த மாநிலத்தின் பெயரை ‘தமிழ்நாடு’ என மாற அண்ணாவால் சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புக்குரிய நாள். தமிழர்கள் வாழும் பகுதிக்கு தமிழ்நாடு என்று கூட பெயர் சூட்ட முடியவில்லையே என்ற தந்தை பெரியாரின் ஏக்கத்தையும், சங்கரலிங்கனாரின் தியாகத்தையும் ஆட்சிக்கு வந்தவுடன் நிறைவேற்றியது திமுக அரசு.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 18: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 19) ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

மன்னார் வளைகுடா, அதையொட்டிய தென் தமிழகப் பகுதிகள், வடக்கு கேரளம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் மேல் வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 19) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகத்தில் திங்கள்கிழமை (ஜூலை 20) ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

மதுரையில் 104.18 டிகிரி வெயில்: தமிழகத்தில் அதிகபட்சமாக மதுரை விமான நிலையத்தில் 104.18 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. மதுரை நகரம்-102.92, தூத்துக்குடி-101.48, தஞ்சாவூர்- 100.4, நாகை-100.04 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: வடதமிழக கடலோரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 19) சூறாவளிக் காற்று 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கு கருவியாக இருக்க மாணவர்கள் உறுதியேற்க வேண்டும்

ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர்

கோவை அமிர்தா விஸ்வ வித்யாபீடத்தில் நடைபெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பு தொடக்க விழாவில் பங்கேற்றுப் பேசிய தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர். உடன், கல்வி நிறுவன நிர்வாகிகள்.

கோவை, ஜூலை 18: நாடு வளர்ச்சி அடைய நானும் ஒரு கருவியாக இருப்பேன் என்று மாணவர்கள் உறுதியேற்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் கூறினார்.

கோவை எட்டிமடை அமிர்தா விஸ்வ வித்யாபீடத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பு தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது. கல்வி நிறுவனத்தின் பதிவாளர் பிபின் நாயர் வரவேற்றார். மாதா அமிர்தானந்தமயி மடத்தின் பொதுச் செயலர் சுவாமி பூர்ணாமிர்தானந்த புரி ஆசியுரை வழங்கினார். பல்கலைக் கழக வேந்தர் மாதா அமிர்தானந்தமயி தேவி இணையவழியில் அருளாசி வழங்கினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் பேசும்போது, கற்றலுக்கு எல்லையே இல்லை. வாழ்க்கை முடியும் வரையிலும், கடைசி மூச்சு இருக்கும் வரையிலும் கற்றல் தொடரும்.

இங்கு உயர் கல்வியில் சேர்ந்துள்ள நீங்கள் கல்வியை எப்படித் தொடருவது என்பதைத் தான் இங்கு கற்றுக்கொள்ளப் போகிறீர்கள். உங்களுக்கு வழங்கப்படும் பாட நூல்களில் இருப்பதெல்லாம் வெறும் எழுத்துகள் மட்டுமே. ஆனால் நீங்கள் அந்த எழுத்துகளின் பின்னால் இருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். மாணவர்கள் எப்போதும் உண்மையைப் பேச வேண்டும், தர்மத்தின்படி நடக்க வேண்டும்.

நாம் ஏன் இங்கு வந்தோம், எதற்காகப் படிக்கிறோம், அதன் தேவை என்ன என்பதை உணர வேண்டும். நாம் அனைவரும் இந்த சமுதாயத்தின் ஒரு அங்கத்தினர். நமது கல்வியின் நோக்கம் நன்கு படித்து, நல்ல வேலை பெற்று, அதிகம் சம்பாதித்து, வசதியாக வாழ்வது மட்டும் அல்ல. எனது கல்வி எனக்கானது மட்டுமல்ல, எனது குடும்பத்துக்கானது மட்டுமல்ல, சமூகத்தில் வாழும் சக மனிதர்களுக்கானது என்பதை உணர வேண்டும். தேர்வுகள் எப்போதும் நமது நினைவுத்திறனை சோதிப்பவைதான். ஆனால் கல்வியின் உண்மையான நோக்கத்தை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

வரும் 2047க்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற பிரதமர் மோடி ஒரு மிகப்பெரிய கனவை வைத்திருக்கிறார். மோடியின் கனவு நம் ஒவ்வொருவரின் கனவு, அதை நனவாக்க நீங்கள் உறுதியேற்க வேண்டும். இந்தியாவை வளர்ந்தநாடாக்குவதில் எனது பங்களிப்பு என்ன என்ற கேள்வியை ஒவ்வொருவரும் எழுப்ப வேண்டும். நாடு வளர்ச்சி அடைவதற்கு நானும் ஒரு கருவியாக இருப்பேன் என்று நீங்கள் ஒவ்வொருவரும் உறுதியேற்க வேண்டும். அடுத்த 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாடு வளர்ச்சி பெற்றதில் எனது பங்களிப்பும் இருந்தது என்பதை நீங்கள் பெருமையுடன் கூறும் நிலை வர வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், சட்டத் துறை டீன் அனில் ஜி.வாரியத், வணிகத் துறை டீன் நவ சுப்பிரமணியம், பொறியியல் துறை டீன் சசாங்கன் ராமநாதன் உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் பலர் பங்கேற்றனர்.

திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு வட மண்டலம் உருவாக்கப்படும்: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

போளூர்/ஆரணி, ஜூலை 18: திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு வட மண்டலம் அமைக்கக்கப்பட்டு அரசின் வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் 26-ஆவது கோடை விழா சனிக்கிழமை தொடங்கியது. விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமை வகித்தார்.

ஆரணி கோட்டாட்சியர் சிவா, சுற்றுலா மற்றும் தொல்லியல் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்) வீ.ப. ஜெயசீலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட திட்ட இயக்குநர் காஞ்சனா வரவேற்றார். போளூர் எம்எல்ஏ அபிஷேக் (தவெக) வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேஷ் குமார், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் கலந்து கொண்டு விழாவை தொடங்கிவைத்தனர்.

விழாவில் அமைச்சர் ராஜேஷ் குமார் பேசியதாவது: ஜவ்வாதுமலையில் சாமை, வரகு, தினை, சந்தனம், பழ வகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இங்குள்ள மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன என்றார்.

இதைத் தொடர்ந்து அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:

திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பெண் குழந்தைகளுக்கு சிறு வயது திருமணம் நடைபெறுகிறது. பெண் கல்வியின் அவசியம் குறித்து பெற்றோர்களுக்கு தெரியாததால்தான் இதுபோன்ற திருமணங்கள் நடைபெறுகின்றன. இவற்றை தடுத்து நிறுத்த பெண் குழந்தைகளை உயர் கல்வி பெறவைக்கவேண்டும்.

திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், தருமபுரி என பல மாவட்டங்களுக்கு திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு வட மண்டலம் அமைத்து, பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ள வுள்ளோம்.

மலைவாழ்மக்களுக்கு ஜாதிசான்றிதழ், கல்வி வழங்குவதை முக்கியப் பணியாக ஏற்று இந்த அரசு செய்து வருகிறது. பழங்குடியினருக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கூடுதல் பள்ளிகள், மருத்துவமனைகள் அமைக்கப்படும். மாவட்டத்தில் குடிநீர் பிரச்னையை தீர்த்துவைப்பேன், படித்த பெண்கள், இளைஞர்களுக்கு 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும். தமிழகத்தில் போதைப் பழக்கம் ஒழிக்கப்படும் என்றார்.

மேலும், விழாவில் அமைச்சர்கள் இருவரும் வருவாய், ஊரக வளர்ச்சி, மாற்றுத்திறனாளிகள், வேளாண்மைத் துறை என பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் ரூ.111 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் 27,532 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

முன்னதாக, அரசுத் துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை திறந்துவைத்து பார்வையிட்டனர். மேலும், 128 நிறைவுற்ற திட்டப் பணிகளை திறந்துவைத்தனர்.

மேலும், அத்திபட்டு - பரமனந்தல்வரை இடையேயான 38.33 கி.மீ. தொலைவுக்கு சாலை அமைக்கும் பணியை ஆய்வு செய்தனர்.

சங்கர நாராயண சுவாமி கோயிலில் ஆடித் தவசு திருவிழா தொடக்கம்

சங்கரன்கோவில், ஜூலை 18: தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி கோயிலில் ஆடித் தவசு திருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயங்களில் ஒன்றான இக்கோயிலில் ஆடித் தவசு திருவிழா ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் 12 நாள்கள் நடைபெறும்.

நிகழாண்டுத் திருவிழாவையொட்டி, சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, கொடிப் பட்டம் வீதி சுற்றி கோமதி அம்பாள் சந்நிதி முன்புள்ள கொடி மரத்திற்கு கொண்டு வரப்பட்டு, அபிஷேகம், சிறப்பு வழிபாடுகள் நடைபெற்ற பின்னர், காலை 7.05 மணிக்கு கொடியேற்றப்பட்டது (படம்).

கொடி மரம் தர்ப்பைப்புல், மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, அதற்கு பட்டு பரிவட்டம் கட்டப்பட்டது. பின்னர், கொடி மர பீடத்திற்கு மஞ்சள், விபூதி, பால், தயிர், இளநீர், தேன், வாசனைத் திரவியங்கள், ஹோமத்தில் வைக்கப்பட்டிருந்த 9 கும்பங்களின் கலச நீர் ஆகியவற்றால் அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து, வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

திருவிழாவின் 9ஆம் நாளான ஜூலை 26ஆம் தேதி காலை கோமதி அம்பாள் எழுந்தருளும் தேரோட்டம் நடைபெறுகிறது. முக்கிய நிகழ்ச்சியான ஆடித் தவசுக் காட்சி 28 ஆம் தேதி மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

யானைகளுக்கு சிகிச்சை அளிப்பதில் தனியார் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தக் கூடாது

உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 18: வனத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணிகளில் தனியார் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் விலங்குகள் நல ஆர்வலர் எஸ்.முரளிதரன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் வனத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கும், கோயில் யானைகளுக்கும் சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனத்துக்கு தலைமை வனப் பாதுகாவலர் அனுமதி வழங்கியுள்ளார்.

வனத் துறையில் தகுதியான கால்நடை மருத்துவர்கள் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள நிலையில், வனத் துறை கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனங்களை அனுமதிக்க வேண்டிய அவசியம் குறித்து வனப் பாதுகாவலர் விளக்கம் அளிக்கவில்லை.

எனவே, யானைகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கிய உத்தரவை ரத்து செய்ய வேண்டும். யானைகளுக்கு சிகிச்சை அளிக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்த அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோயிருந்தார்.

இந்த வழக்கு சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நீதிபதி என்.சதீஷ்குமார், டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், வனத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தக் கூடாது என உத்தரவிட்டார்.

மேலும், இந்த மனுவுக்கு வரும் ஜூலை 31-ஆம் தேதிக்குள் வனத் துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

21 மணி நேரத்தில் தொல்காப்பியத்தை எழுதி முடிக்கும் உலக சாதனை முயற்சியில் அரசுப் பள்ளி மாணவி

கோவில்பட்டி, ஜூலை 18: தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் முழுவதையும் மனனம் செய்து, 21 மணி நேரத்தில் எழுதி முடிக்கும் உலக சாதனை முயற்சியை அரசுப் பள்ளி மாணவி உமா மகேஸ்வரி சனிக்கிழமை தொடங்கினார்.

விருதுநகர் மாவட்டம், சிப்பிப்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியின் 11ஆம் வகுப்பு மாணவி உமா மகேஸ்வரி, சிறு வயதில் இருந்தே தமிழ் மீது அதிக ஆர்வம் கொண்டவர். இவர் 10ஆம் வகுப்பு படித்தபோது, சிவகாசி அய்ய நாடார் ஜானகியம்மாள் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 3 அதிகாரங்கள், 27 இயல்கள் என 1,610 நூற்பாக்களைக் கொண்ட தொல்காப்பியத்தை 2.30 மணி நேரத்தில் முற்றோதல் செய்தார்.

அகில இந்திய சாதனைப் பதிவு புத்தக நிறுவனமும், உலக தொல்காப்பிய சாதனையாளர்கள் பேரவையும், இதை உலக சாதனையாக அங்கீகரித்தன.

மாணவி உமா மகேஸ்வரி.

இந்நிலையில், மாணவி தொல்காப்பியம் முழுவதையும் 21 மணி நேரத்தில் எழுதி முடிக்கும் உலக சாதனை முயற்சியை கோவில்பட்டியில் உள்ள எழுத்தாளர் கி. ராஜநாராயணன் நினைவு அரங்கத்தில் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கினார்.

கோவில்பட்டி மகிழ்வோர் மன்ற நிறுவனர் மருத்துவர் ஸ்ரீ வெங்கடேஷ், இந்த நிகழ்வைத் தொடக்கி வைத்தார். சனிக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கிய சாதனை முயற்சியை ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 19) காலை 5 மணியளவில் நிறைவு செய்ய மாணவி திட்டமிட்டுள்ளார்.

புதுச்சேரி ஆல் இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ், கரிசல் இலக்கியக் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, கோவில்பட்டி மகிழ்வோர் மன்றம், ரோட்டரி சங்கம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மாணவியைத் தொடர்ந்து கண்காணித்தனர்.

உலக சாதனை முயற்சி நிகழ்வின் தொடக்க விழாவில், சிப்பிப்பாறை அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் நாகலிங்கம், என். சுப்பையாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் முனியப்பன், தமிழாசிரியர் ராஜசேகர், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை, முன்னாள் எம்.பி. சிப்பிப்பாறை அ. ரவிச்சந்திரன் பார்வையிட்டார்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

பிராந்திய அலுவலகம் :
எண்.43, தரைத் தளம், ஹுமீதியா சென்டர், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.
போன் : +91-44-28238250/ 28281109
E-mail : ro1005@sib.bank.in

சொத்து வசப்படுத்துதலுக்கான அறிவிப்பு

[விதி 8(1)ல் காண்க] (அசையா சொத்திற்காக)

திரு சௌத் இந்தியன் பேங்க் லிட்.-ன் அதிகாரம் பெற்ற மற்றும் கீழே கையொப்பம் செய்துள்ள அலுவலர் செக்யூரிடைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002-ன்படி செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளில் சட்டப்பிரிவு 13(12) உடன் கூடிய விதி 3-ன்படி, சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு நோட்டீஸ் கடந்த 20.11.2023 அன்று கடன்தாரர்கள்/உத்தரவாதமளித்தவர்கள்/காலஞ்சென்ற திருமதி.L. பாரதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் : 1. திரு.லோகநாதன். V, (மனைவி பெயர் காலஞ்சென்ற L. பாரதி), 2. திருமதி. பிரியா, (தாயார் பெயர் காலஞ்சென்ற L. பாரதி), 3. திரு. கார்த்திக் (தாயார் பெயர் காலஞ்சென்ற L. பாரதி) மற்றும் 4. திரு.பார்த்தசாரதி. L, அனைவரும் வசிக்கும் இடம் : கதவு எண்.20C/2, ஒலி முகம்மது பேட்டை ரோடு, காஞ்சிபுரம் - 631501 ஆகியோர்களின் திருப்பிச் செலுத்த வேண்டிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, ரூ.21,13,367.45 (ரூபாய் இருபத்தொரு லட்சத்து பதிமூன்றாயிரத்து முந்நூற்று அறுபத்து ஏழு மற்றும் பைசா நாற்பத்து ஐந்து மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகளுடன் நோட்டீஸ் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நோட்டீஸ் தரப்பட்டது.

ஆனால் மேற்படி கடன் தொகையைக் கடன்பெற்றவர்/உத்தரவாதமளித்தவர்கள்/காலஞ்சென்ற திருமதி.L. பாரதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டதால் 2002 செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளில் சட்டப்பிரிவு 13(4) மற்றும் அதற்குரிய விதி 8 இதர விதிகளின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழே கையொப்பமிட்டவர் 16.07.2026ல், கீழே விவரித்துள்ள சொத்தினை கொள்நிலை சுவாதீனம் செய்து கொண்டுள்ளார் என்று கடன் பெற்றவருக்கும்/உத்தரவாதமளித்தவர்களுக்கும்/காலஞ்சென்ற திருமதி.L. பாரதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே, குறிப்பாக கடன் பெற்றவரும்/உத்தரவாதமளித்தவர்களும்/காலஞ்சென்ற திருமதி.L. பாரதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களும் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் மேலில் எவ்வித ஒப்பந்தங்களும் செய்து கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் திரு சௌத் இந்தியன் பேங்க் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய ரூ.28,83,177.54 (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து நூற்று எழுபத்து ஏழு மற்றும் பைசா ஐம்பத்து நான்கு மட்டும்) 15.07.2026 தேதி வரை மற்றும் கூடியுள்ள பின் வட்டித் தொகையையும், செலவுகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கும் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

விற்பனை அறிவிப்பு பிரசுரிக்கப்படும் முன்னதாக பிணையம் வைத்துள்ள சொத்துக்களை மீட்பதில் உள்ள கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ள சர்பாசி சட்டத்தின் உட்பிரிவு (8) பிரிவு 13க்கு, கடன்பெற்றவர்/உத்தரவாதமளித்தவர்கள்/காலஞ்சென்ற திருமதி.L. பாரதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்து விபரம்

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலூகா, காஞ்சிபுரம் டவுன், டவுன் சர்வே எண்.3145/1, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான 2756 சதுரடி நிலம், அதனோடான கதவு எண்.20C & 21, ஒலி முகம்மதுபேட்டை ரோடு, பெரிய காஞ்சிபுரம் விலாச கட்டிடங்களுடன் மற்றும் அனைத்துப் பிற கட்டுமானங்கள், அபிவிருத்திகள், உள்ள வசதிகளில் உரிமைகள் மற்றும் அங்குள்ள பாத்தியதைகளுடன் கூடியது. திரு.லோகநாதன். V, திரு.பார்த்தசாரதி. L மற்றும் திரு.கார்த்திக். L ஆகியோருக்குச் சொந்தமான இச்சொத்து காஞ்சிபுரம் இணை சார் பதிவு அலுவலகத்து 30.10.2000 தேதியில் பதியப்பட்ட பாகப்பிரிவினை பத்திர ஆவண எண்.2407/2000ன் 'B' அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எல்லைகள்: வடக்கு - தெரு, கிழக்கு - ரத்தினவேலின் மனை, தெற்கு - லோகநாதனின் மனை, மேற்கு - காலா சாகிப்பின் மனை.

தேதி : 16.07.2026
இடம் : காஞ்சிபுரம்

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
திரு சௌத் இந்தியன் பேங்க் லிட்.

திரு சௌத் இந்தியன் பேங்க் லிட் பதிவு அலுவலகம் : 'SIB ஹவுஸ்', T.B.ரோடு, மிஷன் குவார்டர்ஸ், திருச்சூர் -680001. தேசிய போன் : +91-487-2420020, மேலும் : +91-487-2442021, மின்னஞ்சல் : sibcorporate@sib.bank.in இணைய தளம் : www.southindianbank.com
CIN : L65191KL1929PLC001017

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அனையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண். 1 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :
கடன்தாரர்: 1) திருமதி.தேவிமீனாட்சி, க/பெ.S.பாண்டியன், 2. திரு.S.பாண்டியன் த/பெ.சாரங்கபாணி, இருவரின் முகவரி: 747/2, மேட்டு தெரு, உள்ளாவூர் கிராமம், வாலாஜாபாத் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்-605305.
மொத்த நிலுவை தொகை: 12-07-2026 அன்று வரை ரூ.82,85,986.21 மேலும் 13-07-2026 முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள்: சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் : சொத்து-1: தென் சென்னை பதிவு மாவட்டம், படப்பை துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, வரதராஜபுரம் கிராமம், மகாலட்சுமி நகர் என்ற முகவரியில் சர்வே எண். 238/2C (பகுதி) -ன் படி மனை எண்.109-ல் மொத்தமுள்ள 2640 சதுர அடி நிலத்தில் 420 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் தரை தளத்தில் 795 சதுர அடி (பொது ஏரியா உட்பட) முடிக்கப்படாத ப்ளாட் எண்.G1.

(G1) குறைந்த பட்ச விலை : ரூ.18,60,000/- | முன் வைப்பு தொகை